# Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்

C.C. No. 631/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | குப்பம்மாள் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க /பெ. | | கிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | அமாவாசைபாளையம் | வயது | - | 48 |

20.08.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அமாவாசைபாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கணேசன் எனது தம்பி. சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு காலை 05.00 மணியளவில் எனது தம்பி காலையில் எழுந்து பாத்ரூம் செல்வதற்காக உளுந்தூர்பேட்டை ரோட்டில் சென்று கொண்டிருந்த போது உளுந்தூர்பேட்டையிலிருந்து சென்னை மார்க்கமாக வந்த தனியார் பேருந்து எனது தம்பியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக பாண்டியன் என்பவர் எனக்கு தகவல் தெரிவித்தார்.

2. நான் உடனே சம்பவ இடம் சென்று பார்த்தேன். எனது தம்பியின் தலையில் காயம் ஏற்பட்டது. பின்பு ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்னார். இந்த விபத்து சம்மந்தமாக எனது தாயார் புகார் கொடுத்தார். போலீசார்எனது தம்பியின் பிரேதம் மீது பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது விபத்து ஏற்படுத்திய பேருந்து நின்றிருந்தது. அதன் பதிவெண்

நான் கவனிக்கவில்லை, அந்த பேருந்தின் ஓட்டுநர் ஓடிவிட்டார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதியெல்லாம் எனக்கு நியாபகம் இல்லை, எனக்கு படிக்க தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் சொன்னது தான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம்.

2. பாண்டியன் எனக்கு தகவல் சொன்னதாக சொல்கிறேனே நேரடியாக சொன்னாரா அல்லது போன் மூலம் சொன்னாரா என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லயுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.,
T.V.Nallur.